விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

[illegible] 28 ஆவணி 6 ஜுலைகள் 15 இதழ் 193

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-8-1986

### கவசவாகனம், பாரம்தூக்கி சகிதம்—

## யாழ்குடாநாடு நோக்கி நகர்ந்துவரும் இராணுவம்

(நமது நிருபர்)

யாழ். குடாநாட்டைநோக்கி மேலும் பெருந்தொகையான இராணுவத்தினர் 20க்கு மேற்பட்ட வாகனங்கள் சகிதம் வந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிய கவசவாகனங்கள், பஸ்கள், பாரம் தூக்கிகள், லொறிகள் போன்றனபின்னால் நகர்ந்துவர வீதிஓரமாக அணி அணியாக இராணுவத்தினர் வந்தவண்ணமிருந்தனர்.

இராணுவத்தினரின் கைகளில் இருந்த துப்பாக்கிகள் இடையிடையே ஆகாயத்தை நோக்கி வேட்டுகளைத் தீர்த்த வண்ணமிருந்தன.

அனுராதபுரத்திலிருந்து புறப்பட்ட இராணுவத்தினர் நேற்றுக்காலை வவனியா வந்தடைந்தனர். பின்னர் தமது பிரயாணத்தை மேற்கொண்டவர்கள் மாங்குளத்தை அண்மித்து விட்டார்களாம்.

(வவ - மா)

### 'அட்டுழியத்திலிருந்து பாதுகாக்க ஆயுதமே வழி'

கொழும்பு. வியாழன்

''தமிழ்மக்களின் பூரண பாதுகாப்பிற்கு நிரந்தர உத்தரவாதமில்லாமல் தமிழ்ப் போராளிகளை ஆயுதங்களைக் கைவிடச் செய்யமுடியாது''

இவ்வாறு லங்கா சமசமாஜகட்சி பொதுச்செயலாளர் திரு வாசுதேவ நாணயக்காரா கண்டியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்; புதிய யோசனைகள் இயந்திரத் துப்பாக்கிக்குப் பதிலாக குண்டாந்தடிகளை ஏற்றுகொள்ளும் நிலை ஆகுமானுல் அதற்குதமிழ் போராளிகள் உடன் படுவார்களா? வடக்கு கிழக்கில் நடைபெறும் ஆயுதப்படையினரின்

[4ம் பக்கம் பார்க்க]

### ● பருத்தித்துறை நேரடிப் போரில்—

# எட்டுப் படையினரும் 2 போராளிகளும் பலி

(அலுவலக நிருபர்)

**பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் புறப்பட்ட இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் பலத்த நேரடிப் போர் நடைபெற்றது. இந்த நேரடிப் போரில் இராணுவ தரப்பில் எட்டுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும், போராளிகள் தரப்பில் இருவர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் ஒன்றரை மணியளவில் நூற்றுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வெளியே வந்தனர்.

இராணுவத்தினர் ஹாட்லிக் கல்லூரியை அண்மித்ததும் தொடர்ந்து முன்னேறவிடாது ஈழமக்கள புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படை வீரர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளும் எதிர்கொண்டு தாக்குதல் மேற்கொண்டனர்.

இத்தாக்குதலை தொடர்ந்து இராணுவத்தினருக்கும் போராளிகளுக்குமிடையில் பலத்த நேரடி துப்பாக்கிச்சமர் இடம்பெறறது

இந்தநேரடிமோதலின்போது இராணுவத்தினர் தரப்பில் எட்டுக்கு மேற்பட்ட சிப்பாய்கள் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் மக்கள் விடுதலைப்படை வீரர்கள் தரப்பில் சங்கர் (உடுப்பிட்டி), குமார் (பருத்தித்துறை) ஆகிய இருவர் பலியானதாகவும் ஈ. பி ஆர். எல் எவ், விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

''மக்களுக்காக மரணித்த எமது தோழர்களின் உடல்களை மீட்டெடுப்பதில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளும் இணைந்து செயல்பட்டனர்'' என்றும், தாயக விடுதலைக்காக தம்மையே அர்ப்பணித்த போராளிகளின் தியாகங்களை அரைகுறைத் தீர்வுகளால் விரயமாக்க அனுமதியோமென்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளும் இச்சம்பவம் குறித்து அறிக்கை விடுத்துள்ளது

இது இவ்வாறிருக்க போராளிகளின் எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்து மீண்டும் முகாம் திரும்பிச்சென்ற இராணுவத்தினர் முகாமிலிருந்து மக்கள் குடியிருக்கும் பகுதிகளைநோக்கி 'ஷெல்' களை ஏவிவிட்டனர்,

இத்தாக்குதலால் பருத்தித்துறைப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது. 'ஷெல்' தாக்குதலால் ஏற்பட்டுள்ள சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

(மா)

### மேல்படிப்புக்கு நோர்வே சென்ற 18 மாணவர்களில் ஒருவர் ஆனையிறவில் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி.

யாழ்ப்பாணத்திலிருந்து மேல் படிப்பிற்கு நோர்வே செல்வதற்காக பஸ்ஸில் கொழும்பு சென்ற 18 மாணவர்களில் ஒருவர் ஆனையிறவு முகாமல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான அரியாலையை சேர்ந்தமாணவனுனை ச. ஜெயந்தன் அங்கிருந்து விசாரணைக்காகக் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஸ்ஸில் மாணவர்களுடன் வழியனுப்புவதற்காக அவர்களின் பெற்றோர் உறவினர் உட்பட 42 பேர் சென்றிருந்தனர்.

கைதான மாணவரின் குடும்பத்தினரை தவிர மற்றும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர், உறவினரும் பயணத்தை தொடர்ந்தனர்.

(இ)

### இராணுவ பலம் மிக்க—

## இந்தியா மீது எம்மால் போர்தொடுக்க முடியுமா? — ரொனி.

கொழும்பு, வியா.

''உலகில் மூன்ருவது மிகப் பெரிய இராணுவத்தைக் கொண்டிருக்கும் இநதியா மீது எம்மால் போர் தொடுக்க முடியுமா?'' என்று நிதியமைச்சர் திரு ரொனிடி மெல் பண்டாரவளையில்நடைபெற்ற பொது வைபவம் ஒன்றில் பேசும்போது கேள்வி எழுப்பினூர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ''சுமார் 75 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவையும் எமது நாட்டினையும் பிரிப்பது 20 மைல் தூரமுள்ள கடல்தான். இங்கு சிங்கள மக்கள் தொகை ஆக ஒருகோடி இருபது லட்சமா

(4ம் பக்கம் பார்க்க)

### கூட்டணிக் குழுவினர் இன்று புறப்படுவர்

கொழும்பு, வியா.

இனப்பிரச்னைத் தீர்வுக்கு உத்தேச அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான ஆலோசனைகள் பற்றி கூட்டணியினருக்கும் அரசாங்கக் குழுவினருக்குமிடையில் நேற்று இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றன.

நேற்றுக் காலை நடைபெற்ற இப் பேச்சுவார்த்தை சுமார் இரண்டரை மணி நேரம்நீடித்தது. இதன் போதுகாணிக் கொள்கை பற்றிய அறிக்கை ஒன்று ஆராயப்பட்டது. ஏனைய விடயங்கள் மாலை நடைபெற்ற கூட்டத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

### பாலம் தகர்ப்பு

கிளிநொச்சி, வியா.

கிளிநொச்சி 4ம் வாய்க்கால் பாலம் நேற்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இப்பாலம் கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து 400 கி மீற்றர் தூரத்தில் உள்ளது. குண்டு வெடிப்புச் சத்தத்தைத் தொடர்ந்து முகாமில் இருந்து ஷெல் பரவிப்பாஞ்சான் பக்கமாக ஏவப்பட்டன. ஹெலிக்கப்டரும் வட்டமிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

உ

**விவாக முகூர்த்த அழைப்பிதழ்**

பேரன்புடையீர்!

நிகழும் மங்களகரமான அக்ஷய ஆண்டு ஆவணி மாதம் 23-8-86 [ஆவணி மாதம் 7-ம் திகதி] சனிக்கிழமை காலை 6-30 மணி முதல் 8-15 மணிவரையான சுபமுகூர்த்தத்தில், இணுவில், மஞ்சத்தடி பிள்ளையார் ஆலயத்தில்

| எங்கள் புதல்வன் | எங்கள் ஏக புதல்வி |
|---|---|
| சிரஞ்சீவி | சௌபாக்கியவதி |
| பாஸ்கரன் [பாஸ்] | விஜயஸ்ரீ [ஸ்ரீ] |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும |

நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் கலந்து சிறப்பிககுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

| | |
|---|---|
| திரு. திருமதி. | திரு. திருமதி. |
| எம். இராமையா, | கே. ஆர் சுந்தரமூர்த்தி, |
| (பிரபல நாதஸ்வர வித்வான்) | [பிரபல நாதஸ்வர வித்வான்] |
| கந்தசாமி கோவிலடி, | இணுவில். |
| இணுவில். | |

(தனிபபட்ட அழைப்பிதழ்கள் இல்லை) (C-4174)

### இனப்பிரச்னை——

## இந்தியமத்திய அமைச்சர்குழு சென்னையில்கூடி ஆலோசனை

சென்னை, ஆகஸ்ட். 21

இலங்கை இனப்பிரச்னை குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் திரு சிவ்சங்கர் தலைமையில் மூன்றுமத்திய அமைச்சர்கள்கொண்ட குழுவொன்று மாநில முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன், தமிழ்ப்பாராளிகளின் தலைவர்கள் ஆகியோருடன் இன்று காலை சென்னையில் ஆலோசனை நடத்தியது.

இந்திய உள்துறை அமைச்

[4ம் பக்கம் பார்க்க]

### விவசாயத்துறையில் தெரிவான 30 பேருக்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் அனுமதி

சுண்டுக்குளி, வெள்ளி

பல்கலைக்கழகத் தேர்வில் சித்தியடைந்து விவசாய, விஞ்ஞானபாடத்துறைக்கு தெரிவு செய்யப்பட்ட வடபகுதியைச் சேர்ந்த சுமார் முப்பதுக்கும் அதிகமான மாணவ, மாணவியருக்கு மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதிக் கடிதத்தில் எதிர்வரும் செப்டம்பர்மாதம் 15ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் மேற்படி இருபாடங்களுக்கும் தோற்றுவதற்காக செப்டம்பர் மாதம் 14ந் திகதி அங்கு சமுகமளிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையாலும், போக்குவரத்து சீராக இல்லாத காரணத்தினுலும், பாதுகாப்பின்மை காரணமகவும் இம் மாணவர்கள் மட்டக்களப்புக்குச் செல்வதற்கு தயக்கம் காட்டுவதாகதெரியவருகிறது.

(எ)

## வரி விளம்பரம்

### வகுப்புகள்

A/L (87) பொறியியல் ஆரம்பம்: 23-08-86 Sat. and Sun 2-00-3-15. ஆசிரியர்: சௌந்தி B Sc. (Hons), 3-rd Cross Street, Jaffna. (P. M. C முன்பாக) (C 4125)

க. பொ. த. (உயர்) 87 ஒகஸ்ட் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு விஞ்ஞான, கலை, வர்த்தக வகுப்புக்கள் ஆரம்பகின்றன. 05-09-1986 மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (C4156)

Spoken English புதிய பிரிவுகள். காலை/மாலைநேர வகுப்புகள் ஆரம்பம் 25-08-86 காலை 6-7 மணி. மாலை 6-7 மணி. ஆசிரியர் S. B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர் (C 4171)

A/L பரீட்சை எழுதியவர்கட்கு அரிய சந்தர்ப்பம் புதிய தொழில் நுட்பவகுப்புகள் Electronic Engineering: Radio and T.V. (Antenna Deck), வெல்டிங், வயறிங், மோட்டார் மெக்கானிசம், மோட்டார் வைன்டிங், ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering Aid Hall (ஆனைப்பந்தி சந்திக்கருகாமையில்) 328 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 4124

திரு. வே. சு. நடராசா,
சட்டத்தரணி,
178/8, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதி, 45 ஆம் இலக்கத்தைச் சேர்நத காலஞ்சென்ற பத்மநாதன் பெண் மிருளாளினிதேவி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

முத்துத்தம்பி தவரத்தினம் இல 76, சேர் பி இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3967

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக்கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1986 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

11-07-86 காரணங்காட்டுந் திகதி 12-09-86-க்கு நீடிக்கப்படுகிறது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்
(C 4146)

## தேவை

அச்சுக்கோர்ப்பதிலும், பிளேற்றின் மெசினிலும் வேலைசெய்யத்தெரிந்த ஒருவர் உடனே தேவை. நேரில் வரவும். C/O "சிரித்திரன்" 550. கே கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம், (C4180)

## சேவை

திருமணம் நிறைவேற்றுதல் சிறந்த பொருத்தத்துடனும், வரதட்சணையுடனும் ஒழுங்கு செய்து கொள்ளவும் காணி, வாகனம், கொள்வனவு, விற்பனவு ஒழுங்குக்கும் இன்றே நாடுங்கள: தர்சினீஸ் அரசடிச்சந்தி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய். (C 4098)

திரு. வெ. சு. நடராசா,
சட்டத்தரணி,
178/8, கொழும்புத்துறைவீதி
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதி 45ஆம் இலக்கத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா பத்மநாதன் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்।

முத்துத்தம்பி தவரத்தினம், இல 76 சேர் பி. இராமநாதன் வீதி. யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல 3968

மேலேயுள்ளஇலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11- ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப் பட்டலாகாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றுர்

நீதிமன்றக் கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,
பதிவாளர்

1986 ஆண்டு வைகாசிமாதம் 26 ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

11-07-86 காரணங் காட்டுந் திகதி 5-09-86க்கு நீடிக்கப்படுகிறது.

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

(C 4147)

கலர் பிலிம் சுருள்களை
PROCESSING + PRINTING
செய்வதற்கு
கொழும்பு ஸ்ருடியோ
(A 1041)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 1986ம் ஆண்டுப் பரீட்சைகள்

விஞ்ஞானபீட பரீட்சைகளும், சித்த வைத்தியத்துறை. பட்டப்பின்படிப்பு டிப்ளோமா (கல்வி) தவிர்ந்த ஏனைய கலைப்பீடப் பரீட்சைகளும் பத்து நாட்களினுல் பிற்போடப்பட்டுள்ளன. பிற்போடப்பட்ட பரீட்சைகள் முன்அறிவித்த பாடஒழுங்குகளின்படியேமீண்டும் நடைபெறும் புதிய திகதி ஒழுங்குகள் பற்றிய விபரங்கள் கலைப்பீடாதிபதி, விஞ்ஞானப்பீடாதிபதி, பரீட்சைக்கிளை ஆகியவற்றின் அறிவித்தல் பலகைகளில் போடப்படும்.

நா. பாலகிருஷ்ணன்,
பதில்துணைவேந்தர்
(A1160)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## பட்டமளிப்பு விழா

### ஆகஸ்ட் 30, 1986

1986 ஆகஸ்ட் 30ம் நாள் கைலாசபதி கலையரங்கத்தில் இரு அமர்வுகளிலே பட்டமளிப்பு விழா நடைபெறும்.

அமர்வு [1]

கலைப்பீடம் பி ப 2 00மணிக்கு

அமர்வு [2]

விஞ்ஞானபீடமும்
மருத்துவபீடமும் பி.ப 4 00 மணிக்கு

### அங்கிவழங்குதல்

பட்டமளிப்பிற் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சபை அறையில் 1986 ஆகஸ்ட் 27 28, 29 ஆகிய திகதிகளில் காலை 8 30 மணி முதல் நண்பகல் 12 00 மணிவரை அங்கிகள் வழங்கப்படும். அங்கிகளைப் பெறவரும்பொழுது மாணவர்கள் தமது மாணவர் பதிவுப் புத்தகத்தினை அல்லது தேசியஅடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### நிழற்படம்

பட்டமளிப்பிற் சமுகமளித்துப் பட்டங்களைப் பெற விரும்பும் மாணவர்கள் யாவரும் நிழற்படப் பிரதியொன்றிற்கு ரூபா 12/- செலுத்தியதற்குரிய பற்றுச் சீட்டினையும் அங்கிகளைப் பெறவரும்பொழுது சமர்ப்பிக்க வேண்டும்.

### அனுமதிச்சீட்டு

அங்கிகளைப்பெறும் மாணவரொவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருந்தினர் அனுமதிச் சீட்டு வழங்கப்படும்.

பதிவாளர்.
[A1164]

## Chundikuli Girls' College Jaffna.

DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

Week Days only: Duration 4 months.

Module I: Introduction to Computing and Data Processing.

Module II: Programming in Basic Language Including Terminal Practice in B. B C. Microcomputer.

Contact College Office before September 5th.

(A 1157) PRINCIPAL.

## பணிவான வேண்டுகோள்

எனது மோட்டார் சயிக்கிளை (ஹொண்டா CD 185- 10 ஸ்ரீ 6113) 17- 7- 86 அன்று இரு இளைஞர்கள், இயக்கத்தின் பெயரைச் சொல்லி கைதடிச் சந்தியில் வைத்து வாங்கி ஒரு மணித்தியாலத்தில் திருப்பித் தருவதாக கொண்டு சென்றவர்கள் இன்னமும் என்னிடம் திருப்பி ஒப்படைக்கவில்லை; ஆகவே புனிதமான இயக்கங்கள் இதில் தலையிட்டு மோட்டார் சயிக்கிளை மீட்டுத் தரும்படி தாழ்மையாக வேண்டுகிறேன்.

சி. புவனேந்திரன்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
(C 4181)

## சமுத்திரா மல்ரி சேவிஸ்

### கண்டி வீதி, சாவகச்சேரி

22 8- 86 இன்று தொடக்கம் எமது மேற்படி கிளை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

துணைச்செயலகம்
சமுத்திரா மல்ரி சேவிஸ்
303, பலாலி றோட்,
கோண்டாவில்.

கிளை நிறுவனங்கள்

- ★ முருகமூர்த்திலேன், — நெல்லியடி, கரவெட்டி.
- ★ கே .கே. எஸ். வீதி — தெல்லிப்பளை
- ★ ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.
- ★ வங்களாவடி — வேலணை-
- ★ காரைநகர் வீதி — மானிப்பாய்.
- ★ கண்டி வீதி — சாவகச்சேரி.

உங்கள் தேவை எங்கள் சேவை
(A 1069)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருஷம் ஆவணி மாதம் 6ஆம் திகதி (22 8-86) வெள்ளிக்கிழமை முற்பகல் 9-50 மணி முதல் 10-29 மணிவரையுள் வரும் துலாலக்கின சுப முகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
கிருபாலன்
(யப்பான் ஜுவல்லர்ஸ்)
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
கிருபாலினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

23-8 86 சனிக்கிழமை மாலை 3-00 மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்புபசார வைபவம் நடைபெறும்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

Dr. ஆ. முருகேசுவும் (R M P.) பாரியாரும்
234/4, கே. கே. எஸ். லேன்,
யாழ்ப்பாணம்.

இ. அன்னலிங்கமும் பாரியாரும்
கோணவலை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை.)
(C 4179)

## மணிவாக்கு

தன் நான்கு வயதுக் குழந்தைக்கு எப்போது கல்வியை ஆரம்பிக்கலாமென ஒரு தாய் பெரியவர் ஒருவரைப் பார்த்துக் கேட்டாள். அதற்கு, ''அம்மா ஏற்கனவே நீங்கள் மூன்று வருடங்களை வீணாக்கிவிட்டீர்கள். குழந்தையின் முகத்தில் என்று முதற் புன்னகை மலர்கின்றதோ அன்றே கல்விக்கான சந்தர்ப்பமும் ஆரம்பிக்கிறது'' என்றார் அந்தப் பெரியவர்.

—அபேகாயில் வேட்லி,

# நமது நோக்கு

## வளர்ந்துவரும் சிறுவர் சமுதாயம்

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியமையால் சமுதாயத்தில் அநாதிகாலம் தொட்டு பயின்றுவரும் பண்பாட்டு மரபுகள் மறைந்து விடுமோ என பலர் முன்னர் அச்சம்கொண்டனர்.

இந்த அச்சத்துக்கு இடமளிக்கும் வகையில் பல சம்பவங்களும் நடவடிக்கைகளும் கூட இடம்பெற்று வந்தன.

தெருவில் நடந்து செல்லும் முதியவரை ''என்ன கிழட்டுப்பிள்ளை வீட்டில் சொல்லிக்கொண்டே வந்தநீ'' எனக்கேட்டு சைக்கிளால் உரசிக்கொண்டு ஓடிய இளைஞர்கள் உண்டு.

கோயில் தர்மகர்த்தாக்களை இம்சிப்பது, கொள்ளையடிப்பது, வயதான மாதர்களை வாயில்வந்தபடி பேசுவது போன்றவையும் நடந்து வந்தன.

பொலிஸாருடன் உறவு, ராணுவத்துடன் தொடர்பு என்று காட்டுவதன் மூலம் சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் தேடிக்கொண்டவர்களைப்போன்று இயக்கத்துடன் தொடர்பு எனக் காட்டிக்கொண்டு சொந்த நலன்களைப்பேண முற்பட்டவர்களும் உண்டு.

இவைகளைக் கண்டும் அறிந்தும் பேசாமடைந்தைகளான பொதுமக்கள் ''எல்லாமே இந்தப் பொடியன்களால் நாசமாகப் போகின்றதே'' என அங்கலாய்த்தார்கள்.

ஆனால், இன்று நிலைமை வெகுவாக மாறிவருவது ஒருபுறமிருக்க, சமுதாயத்தின் ஆணிவேரான சமயக் கலாசாரப் பண்பாடுகளுக்கு இளைஞர்கள் அளிக்கும் மதிப்பையும், அவைகளைப் பேணும் பெரியோர்களை இவர்கள் கனம்பண்ணும் விதத்தையும் பார்க்கையில் முன்னர் ஏற்பட்டிருந்த கவலையும், அங்கலாய்ப்பும் படிப்படியாக மறைந்து வருகின்றது எனலாம்

அவசரப்படுவதும், ஆத்திரப்படுவதும் இளைஞர்களுக்கேயுள்ள பண்பு. வயதும், அனுபவமும் அதிகரிக்க அதிகரிக்க நிதானமும், சிந்தனைத்தெளிவும், இலட்சிய உறுதியும் ஏற்படுவதுண்டு.

ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் மத்தியில் இந்தப்பண்பு பாராட்டிப்போற்றும் விதத்தில் வளர்ந்திருப்பதைப் பார்க்கின்றோம்.

இவை இவர்களுக்குமாத்திரமே உரியவையன்று இவர்களுக்குப் பின் வளர்ந்து வரும் இன்னொரு சமுதாயம் இவர்களை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கின்றது. இது ஒரு தொடர் சங்கிலி.

எனவே, இவர்களின் பொறுப்பும் இன்றைய சமுதாயத்தேவையை மட்டும் கருத்தில் கொண்டதாக இருக்க முடியாது.

வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தினர் இலட்சிய புருஷர்களாக இனத்தின் விடுதலையை மட்டும் கருத்தில் கொண்டவர்களாக இல்லாமல் புரையோடிப் போயுள்ள சமுதாயப் புண்களை மருந்திட்டு சுகமாக்கும் வைத்தியர்களாகவும், சிதைந்துபோய்க்கிடக்கும் சமுதாயக் கோபுரத்தைக் கட்டியெழுப்பும் இலட்சிய பொறியியலாளர்களாகவும் வளரவேண்டும். விவசாயம், நீர்ப்பாசனம், கைத்தொழில், வாணிபம் மற்றும் இந்தநாட்டின் தேவைகள் யாவற்றையும் இவர்களே பொறுப்புடன் கையேற்க வேண்டியவர்களாதலால், அதற்கேற்ப அவர்களின் வளர்ச்சியை முனைப்பாக நெறிப்படுத்த வேண்டும்.

ஓரளவு படிப்பதும் பின் வெளிநாட்டுக்கு ஓடி ஏதாகிலும் செய்து பணம் தேடுவதும் என்ற மனப்பான்மை இனிமேலும் வளரக் கூடாது. படிப்பும், அதன் பலனும் இந்த மண்ணுக்கு உரமளிப்பதாய் அமைதல் அவசியம்.

அந்த வகையில் இன்றைய நமது சிறுவர் சமுதாயம் வளர்ச்சி பெறுவதற்கான ஆக்கமான அத்திபாரத்தினை உறுதியாக்குவதில்சகலரும் கவனம் செலுத்துதல் அவசியம்.

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு குடமுழுக்கு பெருவிழா இன்று

## அம்பாள் போற்றிமாலை

அருளே போற்றி அமுதே போற்றி
அன்னையே போற்றி ஆதியே போற்றி
அரசியே போற்றி அழகியே போற்றி
அன்பர்களின் துணையே போற்றி போற்றி

கண்ணே போற்றி மணியே போற்றி
கருணையே போற்றி மாதா போற்றி
கற்பகமே போற்றி மாரியே போற்றி
கல்விதரும் துறட்டிப்பனை முத்துமாரி
போற்றி போற்றி

-கு. சிவனேஸ்வரன்

## இலங்கை நாடகத்தின் இறுதி முடிவில் தமிழ்க் குழுக்களே முக்கிய பங்காளராவர்

### கூட்டணி - அரசு ஆலோசனைகள் பற்றி "இந்தியா ருடே"

இலங்கையில் முடிவுறாததுபோல் தோன்றிய இனப்பிரச்னை கடந்த வாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு இறுதியாகதீவில்அமைதி நிலவும் போல் தோன்றியது. இலங்கை அரசுக்கும், கூட்டணிக்குமிடையே 10 தினங்களாக நடைபெற்ற சிக்கலான பேச்சுவார்த்தைகளின் பின்னர் அரசின் உத்தேசமாகாணசபைத் திட்டத்தில் பல முக்கிய உடன்பாடுகள் காணப்பட்டதாகத் தெரியவருகிறது அதே சமயம் கொழும்பில் நடைபெற்ற அரசியல் கட்சிகளின் மாநாடு அரசின்மாகாண சுயாட்சித் திட்டத்தை மேலும் விஸ்தாரப்படுத்தியது. பிரச்னைக்குத் தீர்வு காணுவதில் சம்பந்தப்பட்டோரிடையே இம்முறை கூடியளவு விஷயங்களில் உடன்பாடு காணப்பட்டது தெளிவாகப் புரிகிறது.

இப்பேச்சுக்களைப்பற்றி கூட்டணியினர் எதுவித கருத்தையும் கூறமறுத்துவிட்டாலும், நிதிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாக எமக்கு செய்தி கிட்டியுள்ளது.

உத்தேச மாகாணசபைத் திட்டத்தின்படி 'மாகாண பொலிஸ் கமிஷன்' அம்மாகாணத்தின் பிரதி பொலிஸ் மாஅதிபர் (டி ஐ ஜி) ஜனாதிபதியினால்நியமிக்கப்படும் ஒருவரையும், மாகாணத்தின் முதலமைச்சரினால் நியமிக்கப்படும் ஒருவரையும் கொண்டிருக்குமெனத் தெரியவருகிறது. ஜனாதிபதி மாகாண முதல்வரினால் நியமிக்கப்படுவார் ஒருவரையொருவர் சமநிலைப்படுத்தினாலும், மாகாணத்தின் டி ஐ ஜி தேசிய பொலிஸ் படையைச் சேர்ந்தவராகையில் அவர் மத்திய அரசின் சார்பாகவே நிற்பார் என கூட்டணி கரிசனையுற்றது. அத்துடன் மாகாணத்தின் பொலிஸ்படைக்கு மாகாண, மத்திய நிர்வாகங்களினால் ஆள் சேர்க்கப்படும்போது அது 1:1 என்ற விகிதத்திலேயே அமைந்திருக்க வேண்டுமென

இருப்பார். மற்றது இதுவிஷயம் பற்றி மூன்று மாதங்களுக்கு முன் இலங்கைவந்த திரு. ப, சிதம்பரத்துடன் ஆராயப்பட்டே முடிவெடுக்கப்பட்டது. ஆகவே டில்லியுடன் தொடர்புகொண்ட கூட்டணி தனது அச்சத்தையும் போக்கிக்கொண்டது.

#### காணிக்குடியேற்றம்

காணிக்குடியேற்றம் சம்பந்தமான ஆலோசனைகளில் அரசகாணிகள்என்று வகைப்படுத்தப்பட்டிருப்பதுடன் அவை ஜனாதிபதியினால்மட்டுமேவழங்கப்படலாமென்ற திட்டத்தை முன்னாள் திருமலை எம்.பி. திரு. சம்பந்தன் எதிர்த்தார். இது பற்றித்தகவல் தெரிவித்தஅரச அதிகாரி ஒருவர் ''திரு. சம்பந்தன் சகல காணிகளையும் அவ்வவ் மாகாணசபைகளுக்கே உரியதாக்கப்படவேண்டுமென்றும் தேவையைப்பொறுத்து மாகாணநிர்வாகம் மத்திய நிர்வாகத்திற்குக் காணியை வழங்குமென வாதிட்டார். ஆயினும் பின்னர் டில்லியின் தலையீட்டால் இத்திட்டத்தை அமிர் ஏற்றுக்கொள்ளவேண்டி ஏற்பட்டது எனக் கூறினார்.

தொகுப்பு: இ. செந்தில்.

''இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்று காணப்படுவது இயலுமான காரியம்போல் தென்படுகிறது. ஜெயவர்த்தன அரசு, தமிழ் மிதவாதிகளுடன் எப்படியாகிலும் ஒருசமாதானத் தீர்வுக்கு உடன்படுவதுடன் அதனால் தீவிரவாத சிங்கள, பௌத்தர்களினால் உருவாக்கப்படும் பிரச்னைகளையும் சமாளிக்கப் பார்க்கிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி மறுபுறத்தில் நியாயமாக நடந்துகொள்ளுமாறு புதுடில்லியின் வற்புறுத்தலுக்காளாக்கப்பட்டுள்ளது.''

இவ்வாறு இந்திய சஞ்சிகையான 'இந்தியா ருடே' ''சமாதானத்திற்கு ஒரு சந்தர்ப்பமளித்தல்'' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளது. அதன் சாராம்சம் இங்கு தரப்படுகின்றது.

அவர்கள் நியாயமான முறையில் கோரிக்கைகளை முன்வைத்தனர். பேச்சுக்களின் போது இடம்பெற்ற எவ்விஷயத்திலும் இறுதிமுடிவொன்று காணப்படவில்லையெனக் கூறிய கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம், ''சட்டமும் ஒழுங்கும் விஷயத்தில் நியாய தீர்வொன்று காணப்படலாம்'' என நம்பிக்கை தெரிவிக்கின்றார்.

#### அமிரின் 'எமது நாடு'

கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கமும் இப்பிரச்னைக்குத் தீர்வொன்று காணப்படவேண்டியதன் அவசியம் பற்றிக் கூறினார். அவர் (பேட்டியொன்றில) எமது நாடு என்று குறிப்பிட்டதைப் பற்றி இலங்கை அமைச்சர் ஒருநாள் குறிப்பிடுகையில்: ''ஏழு வருடங்களின் பின் 'எமதுநாடு' என்று அமிர் கூறியது எம்மை மகிழ்ச்சியிலாழ்த்தியது அவர் தமிழீழம் பற்றியல்ல சிங்களவரையும், தமிழரையும் உள்ளடக்கிய எமதுநாட்டைப் பற்றியே குறிப்பிடுகிறார்'' எனக் கூறினார்.

#### சட்டமும் ஒழுங்கும் கூட்டணி நிலையும்

அரசின் மாகாணசபைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள சட்டமும் ஒழுங்கும் பற்றிய விடயத்தில் கூட்டணிப் பிரதி

வும் கூட்டணி விரும்பியது.

#### அரசின் நிலை

இதில் விட்டுக்கொடுக்க அரசாங்கம் மறுத்து விட்டது. மாகாண டி ஐ ஜி. தேசிய பொலிஸ்படையைச் சேர்ந்தவராகிலும்அவர் எப்பக்கமும் சாராது நடுநிலையாகவே இருப்பார் என்பது அரசின் வாதம். அத்துடன் உத்தேச மாகாண சபைத் திட்டத்தின்படி மாகாணத்தில் சட்டமும் ஒழுங்கையும் நிலைநாட்ட இந்த டி ஐ ஜி மாகாண முதல்வரின் அதிகாரத்திற்குட் பட்டவராகவே

#### இணைப்பே முட்டுக்கட்டை

சாத்தியப்படக்கூடிய தீர்வொன்றுக்கு வடக்கு, கிழக்கு இணைப்பே முட்டுக்கட்டை போல் தெரிகிறது. உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட, இணைப்பை முன்நிபந்தனையாக கூட்டணியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

ஆயினும் எச்சந்தர்ப்பத்திலும் இணைப்பு சாத்தியப்படாதது என ஜயவர்த்தன அரசு வலியுறுத்தியுள்ளது.

இந்த விஷயத்திலும் கூட விட்டுக்கொடுத்தல் தன்மை கொழும்பில் காணப்பட்டது. கலாநிதி கொல்வின் ஆர் டி. சில்வா இது பற்றித் தெரிவிக்கையில், ''புதிய யோசனைகளில் இணைப்பு பற்றி தெளிவாக மறுக்கப்பட்டிருந்தாலும், இரு மாகாண சபை [வடக்கு-கிழக்கு] நிர்வாகங்களும், தமக்குள் பரஸ்பரம் நன்மையை தரக்கூடிய விஷயங்களில் ஒன்றையொன்று கலந்தாலோசிக்கவும், சேர்ந்து நடவடிக்கை எடுக்கவும் இதில் வழிவகை செய்யப்பட்டுள்

(5-ம் பக்கம் பார்க்க)

## நல்லைச் செந்தன்

இன்ன லுறுமடியார்க் கேற்றவருள் பாலிப்பான்
வன்ன மயிலேறும் மாமுருகன்—கன்னல்
மொழித்தெய்வி முல்லைவள்ளி மேவும் முருகன்
பொழிதுவான் போற்றுமெப் போதும்

★ ★ ★

எண்மை தனையெரிப்பான்; எண்டிசையும்
போற்றவைப்பான்
ஒண்மை ஒளிவீசும் ஓர் நல்லைச்—சண்முகனும்
சேவற் கொடிகொண்ட சேந்தன் இளங்குமரன்
ஆவ லுடனருள்வான் அண்டு.

★ ★ ★

ஓங்கார ரூபன் ஒயில்வள்ளி உள்ளுவப்பப்
பாங்காய் அருளதனைப் பாலித்த—காங்கேயன்
துங்க எழில்நல்லைத் தூயநற் கந்தனவன்
பங்க மிலாதருண்வான் பற்று.

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

இன்று நல்லூர்க்கந்தன் 13ம் திருவிழா

## தாதிமார் பயிற்சி

யாழ்ப்பாணம், வெள்ளி தாதிமார் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான அறிவித்தல் இம்மாதம் 15ம் திகதி 'கஸட்'டில் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சித்த வைத்தியத்துறை

86ம்—87ம் கல்வி ஆண்டிற்கு சித்த வைத்தியத்துறைக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்ப முடிவுதிகதி ஆகஸ்ட் 31ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் சிரேஷ்ட உதவிப்பதிவாளருடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்றுவிண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்.
(C 1166)


## கூட்டணி குழுவினர் இன்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆராயப்பட்டன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் அரச குழுவின் சார்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, காணி அமைச்சர் திரு. காமினிதிசநாயக்கா கல்வி அமைச்சர் திரு. நிசங்க விஜயரத்தின, உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம், வெளிநாட்டு அமைச்சர் ஜனுப் சாகுல் ஹமீத், நிதி அமைச்சர் திரு. ரொனிடிமெல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீண்டும் இன்று காலை பேச்சு வார்த்தைகள் நடைபெறவுள்ளன. காலை நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் கூட்டணிக் குழுவினர் காணி அமைச்சர் திரு.காமினி தசநாயக்காவுடனும், பிற் பகல் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தைகள் ஜனாதிபதியுடனும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து கூட்டணிக் குழுவினர் இன்று மாலை இந்தியா திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் அவசியம் ஏற்படின் த. வி கூட்டணிக் குழுவினர் மற்றொருபேச்சுவார்த்தைக்கு இலங்கை வரலாம் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [சி-எ]

## இனப்பிரச்னை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர் திரு. பூட்டாசிங், உள்நாட்டு பாதுகாப்புத்துறை இணைஅமைச்சர் திரு சிதம்பரம், வெளியுறவு அமைச்சர் திரு. சிவசங்கர் ஆகியோர் கொண்ட இக்குழுவினர் தமிழ் போராளிகளுடன் ஆலோசனை செய்வதற்காக நேற்று புதுடில்லியிலிருந்து சென்னைக்கு வந்தனர்.

தமிழ் போராளிகள் புதுடில்லியில் தங்கியிருக்கையில் மத்திய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்த இயலாமல்போனதால் மேற்படி இந்த அமைச்சர்கள்குழு இந்தப் பேச்சுக்களுக்காக சென்னை வந்தது.

பேச்சுக்களுக்குப் பின்னர் புதுடில்லி புறப்படுவதற்குமுன்னர் திரு சிவ்சங்கர் சென்னை விமானநிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் தமது குழுவினர் நடத்திய பேச்சுக்களில் சில நல்ல வாய்ப்புக்கள் தோன்றியிருப்பதாகவும், போராளிகள் நல்லமன நிலையில் இருந்ததாகவும் குறிப்பிட்டார். (எ)

## இராணுவ. .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கும் ஆனல் பாக்கு நீரிணைக்கு அப்பால் 5கோடியே 50 லட்சம் தமிழ் மக்கள் இங்கு வாழும் தமிழர்களுடன் இன ரீதியில் இணைந்தவர்களாக இருக்கிறார்கள். இந்த ஐந்தரைக்கோடி மக்களுடன் அயல் ராஜ்பங்களில் 15 கோடி திராவிடர்கள் வாழ்கிறார்கள்.''

இலங்கையிலே ஏற்பட்டு வந்துள்ள வன் செயல்களினால் கடந்த 3 வருடங்களில் சுமார் ஐயாயிரம் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் உயிரிழந்துள்ளார்கள் இதனால் நாட்டிற்கேற்பட்ட நஷ்டமோ அளவிடற்கரியது.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு மட்டும் 100 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளோம். இத்தகைய நிதிநெருக்கடியின் போதும் மக்களின் தேவைகளை ஒதுக்கவில்லை ஆனல்இம்மாதிரியான ஒரு நிலையில் அரசு தொடர்ந்தும் இருக்கமுடியாது. உதவி தரும் அந்நிய நாடுகளும் இந்நிலையை மேலும் நீடிக்கவிட்டால் உதவிகளைக் குறைக்கப் போவதாக எச்சரிக்கின்றன''. (ஒ-க)

## குரும்பசிட்டி, குப்பிளானில் இனந்தெரியாத கோஷ்டி இரு வீடுகள் மீது தாக்குதல்

வசாவிளான், வியாழன் குரும்பசிட்டி குப்பிளான் ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு வீடுகளை நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத கோஷ்டி ஒன்று கைக்குண்டுகள் சகிதம் தாக்கியுள்ளதாக கூறப்படுகின்றன.

சம்பவதினம் நள்ளிரவு இனந்தெரியாத கோஷ்டி ஒன்றை சேர்ந்த சுமார் இருபது பேர் கைக்குண்டுகள், சகிதம் மேற்படி வீடுகளை தாக்கியதாகவும், வீட்டிலிருந்தவர்கள் திருப்பி தாக்கிய போது, தாக்கவந்தவர்கள் பின்வாங்கி ஓடியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தின்போது ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விபரம் எதுவும் கிடைக்கவில்லை.

மேலும் இச் சம்பவத்தின் போது குரும்பசிட்டி குப்பிளானை சேர்ந்த பெருந்தொகையான மக்கள் பீதியடைந்து வெளியேறி ஏழாலை போன்ற அயல் கிராமங்களிற்கு சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (இ - எ)

## மீண்டும் நிவாரண உதவி

திருமலை, வியாழன் திருகோணமலை மாவட்டத்தில் கடந்த வருடம் மே, யூன் மாதம் நடைபெற்ற வன்செயலை தொடர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள 20.233 பேர்களுக்கும் மீண்டும் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த நிவாரண உதவிகள் மீண்டும் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பங்கீட்டு உணவுப் பொருட்களாக வழங்கப்படவுள்ளது. (சி)

## அட்டூழியங். .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அட்டூழியங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஆயுதங்களைத் தவிர அவர்களுக்கு வேறுவழி எதுவுமில்லை என்றார். (இ-சி)


கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

20-08-86 புதன்கிழமை காலை அராலி துறைமுகத்திலிருந்து யாழ் நோக்கி மினி பஸ்ஸில் பிரயாணஞ்செய்த இளைஞர் ஒருவரால் வயோதிசப் பெண்மணி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்ட ஒருபணப்பை திரும்பப் பெறப்படவில்லை. அன்று யாழ் நகரில் நடந்த அசம்பாவிதங்களால்இத்தவறு நிகழ்ந்துவிட்டது. இதில் சம்பந்தப்பட்ட பெண்மணி தயவுசெய்து பின்வரும் விலாசங்கள் ஒன்றிலாவது உங்கள் வசதிக்கேற்ப தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1) பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை, கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. (2) குளோபல் கொம்யூனிக்கேஷன், மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C 4'93)

லிடோ
காலை 10-30, 2-30,
4-30, 6-30.
Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனு வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
(புத்தம் புதிய பிரதி) இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

குரு வீடியோ சென்ரர்
புதிய பட வெளியீடுகள்
[1] வேட்டைப்புலிகள்
★ கராத்தே மணி ★ மாதவி
[2] உனக்காகவே வாழ்கின்றேன்
★ சிவகுமார் ★ நதியா
குரு வீடியோ சென்ரர்,
180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22779 (C 4192)

பிரயாண ஒழுங்குகள்
★ டென்மார்க் ★ கனடா
5-ம் திகதி செல்லவிருக்கும் (05-09-86) குறுப்பில் சேர விரும்புபவர்கள் உடன் கடவுச் சீட்டுடன் தொடர்பு கொள்ளவும்.
அத்துடன்
★ பிரான்ஸ் ★ இத்தாலி
ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி அழைத்துச் செல்லவுள்ளார்.
அவுஸ்திரேலியா
செல்வதற்கு விசா ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
மற்றும்
பாஸ்போர்ட், பொன்டிங், ரிக்கற், விசா என்பன குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.
லிப்ருஸ் லிமிட்ரெட்
R. G. பில்டிங்,
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[A-1070]

இன்று
மங்களகரமான திறப்பு விழா
மிது வீடியோ மூவீஸ்
MITHU V'DEO MOVIES
பிரதான வீதி, சித்தன்கேணி.
என்னும் ஸ்தாபனம் (22-8-1986) இன்று காலை 9-30க்கும் 10-30க்கும் இடைப்பட்ட சுபநேரத்தில் V'DEO PRASAD உரிமையாளர்
திரு. இராமநாதன் அவர்களால்
மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும்.
எங்களிடம்
★ புதிய, பழைய ஒரிஜினல் வீடியோ பிரதிகள்
மற்றும் சகலவிதமான
★ பாதணிகள்
★ பாடசாலை உபகரணங்கள்
ஆகியனவும்
சிறந்த முறையில்
வீடியோ படப்பிடிப்பு
மற்றும்
வீடியோ பிரதி பண்ணல் (COPYING)
போன்றனவும் செய்து கொடுக்கப்படும்.
முக்கிய குறிப்பு:-
திறப்பு விழாவை முன்னிட்டு 22-ந் திகதி முதல் 25-ந் திகதிவரை வீடியோ படப்பிரதிகளுக்கு 5/- (ஐந்து ரூபா) அறவிடப்படும்.
[C-4189]

கடைத் திறப்பு விழா
அந்தியகால சேவை
இன்று முதல் (22-8-86) எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற ''நவலங்கா'' அந்திய காலசேவை பழைய AF றேமன் கட்டிடத்தில் புதிய முறையில் அமைத்துள்ளோம் எமது ஸ்தாபனத்தின் சேவைகள் அனைத்தும் எதுவித சிரமமும் இன்றி இரவு பகல் 24 மணி நேரமும் தொடர்ந்து நடைபெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்:
நவலங்கா அந்தியகால சேவை
பழைய AF றேமன் கட்டிடம்,
147, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
இல; 308, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு—6
தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை முன்பாக,
[C-4196]

# வ.பி.போ.ச. யாழ். பஸ்களில் பொதி ஏற்றத்தடை

ஒட்டுசுட்டான். வியா

வ. பி. போ. வ. சபை யாழ்ப்பாணசாலை பஸ்களில் மட்டும் பொதிகள் ஏற்றுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் பஸ் காப்பாளரிடம் பொதிகளுக்கான சீட்டுப் புத்தகங்கள் கொடுக்கப்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

ஆனால் மற்றைய சாலை பஸ்களில் பொதிகள் ஏற்றுவதற்கு எந்தவித தடையும் விதிக்கப்படவில்லையென அறியப்படுகிறது.

இதனால் பொதிகளுடன் செல்லும் பிரயாணிகள் யாழ் சாலை பஸ்களில் பிரயாணத்தை மேற்கொள்ளாமல் ஏனையசாலை பஸ்களை எதிர் பார்த்துக் காண்டு மணித்தியாலக் கணக்காக காத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. (வா)

# கடத்தப்பட்டவரை விடுவிக்க கோரிக்கை

பருத்தித்துறை. வியாழன்

யாழ்ப்பாணத்தில் வைத்து கடந்த மாதம் இனம் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சண்முகம் செந்துராசாவை விடுவிக்க நடவடிக்கை மேற்கொளுள்மாறு துன்னாலை பிரஜைகள் குழு சகல புனித இயக்கங்களையும் கேட்டுள்ளது,

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜக் கூட்டத்தில் கலந்துகொண்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போதே திரு செந்துராசா கடத்திச்செல்லப்பட்டார்.

இப்பகுதியின் பிரபல சமூக சேவையாளரான இவர் பதின்மூன்று சமூகசேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதி எனவும் பிரஜைகள்குழு அறிவித்துள்ளது

நெல்லியடி பிரதேச பிரஜைகள் குழுக்கள், சமாதானகுழுக்களின கூட்டத்திலும் திரு செந்துராசாவை விடுதலை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புனித இயக்கங்களை கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ)

# மக்கள் ஸ்தாபனங்கள் விஸ்தரிக்கப்பட வேண்டும்

நெல்லியடி, வியாழன்

"இன்று உறவு, உறையுள் கல்வி, சுகாதாரம் ஆகியபல்வேறு பிரச்னைகள் தமிழினத்தை எதிர்நோக்கியிருக்கும் வேளையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்களான பிரதேச சமாதானக் குழுக்களும் பிரசைகள் சபைகளும் தங்கள் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தி விஸ்தரிக்கவேண்டியது அவசியம்."

இவ்வாறு கரவெட்டி திரு இருதயக்கல்லூரி மண்டபத்தில் நடந்த நெல்லியடி பிரஜைகள் குழு கரவெட்டி சமாதான சபைகளின் இணைப்புக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய திரு செங்கதிர்கூறினர்

சட்டத்தரணி திரு வீ. மகாலிங்கம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு செங்கதிர் தொடர்ந்துபேசியதாவது:

"நிர்வாகச் சீர்குலைவு நிறைந்த இவ்வேளை மக்களின் நிறுவனங்கள் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டுடன் இயங்கினால் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெறமுடியும்.

கட்டைவேலி ஞானசாரியர் கல்லூரிஅதிபர் திரு எஸ் சிற்றம்பலம், திரு. சி. செல்லையா, திரு. எஸ். சிவசம்பு, திரு. வீ. பாலசிங்கம், திரு ஜே ஜீ இராஜேந்திரம் ஆகியோரும் பேசினர்.

## வங்கிகள் தொடர்ந்து மூடியநிலையில்

கிளிநொச்சி வியா

கிளிநொச்சி இலங்கைவங்கி, மக்கள் வங்கி ஆகியன தொடர்ந்து இரண்டு மாதங்கட்கு மேலாக இயங்கமுடியாத நிலையில் மூடப்பட்டுள்ளன கரடிப்போக்குப் பாலம் தகர்க்கப்பட்டதாலும், கிளிநொச்சி நகரம் சன நடமாட்டம் அற்று மயானபூமியாகக் காட்சியளிப்பதாலு அங்கு கடமையாற்றும் ஊழியர்கள் அச்சம் காரணமாக கடமைக்குச் செல்லவில்லை

மேற்படி வங்கிகள் பலமாதங்களாக இயங்காமையால் சேமிப்புக் கணக்குப் போன்றவற்றில் பணம்வைப்புச் செய்த மக்கள் அப்பணத்தைஎடுக்க முடியாமல் அல்லல்பட வேண்டியுள்ளது.

## மயிலணியில் ஈழவர் எழுச்சிவிழா

யாழ்ப்பாணம் வெள்ளி

ஈழவர் முன்னணி நடத்தும் "ஈழவர் எழுச்சிவிழா" நாளை 23ம் திகதி சனிக்கிழமை திரு க. செல்வநாயகம் தலைமையில் சுன்னாகம் மயிலணியில் நடைபெறவுள்ளது

இந்த எழுச்சிவிழாவில் காலை நிகழ்ச்சியாக மெய்வல்லுனர் போட்டியும் இரவு நிகழ்ச்சியாக கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன

கலாசார நிகழ்ச்சியில் "வடக்குக் கிழக்கு இணைப்பு மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்னை தீருமா? தீராதா?" என்னும் தலைப்பில் பட்டிமன்றமும், 'இங்கு நடப்பதென்ன", "ஈழத்துக்கு மூன்" என்ற இரு நாடகங்களும், கவியரங்கம், கிராமிய நடனம். வில்லிசை என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஒ)

## வரிகுறைப்பு இல்லை

கொழும்பு, வியாழன்

பாதுகாப்பு செலவினம் அதிகரித்துள்ளதுடன், ஏற்றுமதி பொருள்களின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளதால் வரிகளை மேலும் குறைக்கமுடியாதென்று நிதி அமைச்சர் திரு ரொனி டி மெல் தெரிவித்துள்ளார். (சி)

## பத்துப்பேர் விடுதலை

வவுனியா, வியாழன்

வவனியா தச்சன்குளம் வன்னி ஆயுதப்படை கூட்டு முகாமிலிருந்து பத்துப் பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி விடுதலை செய்யப்பட்டோரின் விபரம்: சி செல்வராசா, ந. இராமசாமி, இ சிவசுப்பிரமணியம், த சுப்பிரமணியம், ப. சுந்தரலிங்கம், சு அந்தோனிப்பிள்ளை, மு. விசுவலிங்கம், மீரான்சகிபு நாசீர், சுந்தரம் லோகேந்திரன். [ஒ]

# இலங்கை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இதற்குமேல் எம்மால் போகமுடியாது. வடக்கு, கிழக்கை இணைத்தால், தேசிய இனப்பிரச்னையை ஒரு மாகாண இனப்பிரச்னையக்குவதில் முடியும். ஏனெனில் இணைக்கப்பட்ட சபையில் சிங்களவரும், முஸ்லீம்களும் சிறுபான்மையினராகி விடுவர்" என்று கூறினார்.

இதேவேளை, வடமாகாணமும, கிழக்கு மாகாணத்தில் தமிழர் பெரும் பான்மையாக வாழும் பகுதிகளுமே இணைக்கப்பட வேண்டுமென்றே தமிழ்க்குழுக்கள் கேட்பதாக அமிர் தமது நிலையை மாற்றினர். இதுவும் அவரின் முன்னைய நிலையிலிருந்து சிறிது விட்டுக் கொடுத்தலே.

## அரசின் சினேகபாவ நடவடிக்கைகள்

இதனிடையே அரசு தரப்பிலிருந்தும் சினேகபாவ கருத்துக்கள் சிலவெளிப்படத் தொடங்கின.

சிங்களத்துடன், தமிழும் உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக்கொளள அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சர்சைக்குரிய அரசியயாப்பின் 6-வது திருத்தத்தையும் நீக்க அரசு சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது அத்துடன் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதிலும் அரசு தயங்கவில்லை எனத் தெர்கிறது.

## தீர்வினை விரும்பும் மக்கள்

இலங்கையில் வாழும் தமிழ் சிங்கள மக்களும் பிரச்னைக்கு விரைந்ததொரு தீர்வையே விரும்புகின்றனர் உண்மையில் அரசியல் கட்சிகள் மாநாட்டினை சுதந்திர கட்சி பகிஷ்கரித்தது கூட தீர்வுக்கு முட்டுக்கட்டையாக எடுத்துக்கொள்ளப்படவில்லை அத்துடன் மாகாணசபைகளுக்கு பௌத்த குருமாரின் எதிர்ப்பும். அரசாங்கத்துக்குப் பெரிதாகத் தோற்றவில்லை. "பிரச்னைக்கு தீர்வொன்று காண முயலும் எமது முயற்சிக்கு குருமாரையும் ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளோம்" என அமைச்சர் காமினி திஸநாயக்கா கூறினர்.

ஆயினும் குமார் பொன்னம்பலம் சொல்வது போல. "சமாதானத் தீர்வொன்றின் வெற்றி அதனை அமுல்படுத்துவதிலேயே தங்கியிருக்க வேண்டும்."

## அமுலாக்கலுக்கு யார் முக்கியம்?

தீர்வினை வெற்றிகாமாக அமுல்படுத்த தமிழ்ப் 'போராளிகளின்' ஆதரவு கட்டாயம் தேவை அவர்கள் தமது ஆயுதங்களை கீழே போட்டால் அவர்களை மன்னிப்பதாக ஜயவர்த்தன பகிரங்கமாகவே உறுதியளித்துள்ளார் அவர் மேலும்; "மாகாண சபைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தமிழ் போராளிகள் தடையாக நிற்காமலிருப்பது பற்றி இந்திய அரசிடம் கேட்பது பற்றி பின்னர் ஆராயப்படும்." என 'இந்தியா ருடே' க்குக் கூறினர்.

எது எவ்வாறு இருப்பினும் ஜயவர்த்தன அரசு, கூட்டணியுடன் உடன்படிக்கையொன்றை எட்டினால் தீவிரவாதப்பிரச்னையைகட்டுப்படுத்துவதாக இந்தியா எவ்வளவு தான் உறுதியளித்தாலும் கூட இலங்கை நாடகத்தின் இறுதி முடிவில் தமிழ் குழுக்களே முக்கிய பங்காற்றுவர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

# "இறைவனை நோக்கியே எல்லோரும் செல்கின்றோம்"

யாழ்ப்பாணம் வெள்ளி

"எல்லா உயிர்களுமேஇறைவனுடைய திருவடியைநோக்கி யாத்திரை செய்கின்றன. இதனை 'திருவடி யாத்திரை' என்று அழைபர். நாமெல்லோரும் திருவடி யாத்திரைக்காரர் என்ற எண்ணம் எமக்கேற்படும்போது உயிரினமெல்லாம் சகோதரர்கள் ஆகின்றனர். எல்லோரும் சகோதரர் ஆகின்றபோதுஎது வித பேதத்திற்கும் இடமில்லாமல்போகிறது.

இவ்வாறு நல்லூர் வருடாந்த மகோற்சவததையொட்டி நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்றுவரும் சொற்பெருரைத் தொடரில் 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு நா. முத்தையா குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் ஆசியுடன் சொற்பொழிவு ஆரம்பமானது. திரு முத்தையா தொடர்ந்து பேசுகையில்:

"மனிதன் ஏன்பிறக்கிறான்? ஏன் இறக்கிறான்? இது ஒரு சுழற்சி இந்தச்சுழற்சி மாற வேண்டுமானால் திருநாமம் ஐந்தெழுத்தும் செப்பப்பட வேண்டும். மனித வாழ்வில் ஏதாவது ஒரு குறிக்கோள் இருக்கவேண்டும்" என்றார்.

நல்லூர் மகோற்சவத்தின் போது தினமும்சொற்பொழிவு மாலை 3மணி முதல் 4மணிவரை நடைபெற்றுவருகின்றது [சி ஆ]

# முதலுதவியாளர் சேவை உயிர்காக்கும் பணியாகும்

பண்டத்தரிப்பு, வியா.

'இன்றைய துன்பகரமான சூழ்நிலையில் முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களின் சேவை மிகவும் முக்கியத்துவம் பெறற தொன்றாகக் கருதப்படுகின்றது. முதலுதவிப் பயிற்சி பெற்றவர்கள் சான்றிதழ்களை மட்டும் பெறுவதோடு திருப்தியடைந்து விடாது நாம் பெற்ற பயிற்சியை அனைவருக்கும் பயன்படுத்த வேண்டும்.'

இவ்வாறு வட்டுக்கோட்டை, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் முதலுதவிப் பயிற்சி பெற்ற சங்க உறுப்பினர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி குறிப்பிட்டார்

வட்டுக்கோட்டை திரு ஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு சங்கத் தலைவி திருமதி எஸ். எதிர்மன்னசிங்கம் தலைமை வகித்தார்.

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் வட பகுதியில் கடந்த 56 வருடகாலமாக சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை சேவையாற்றி வருவதாகவும், அநியாயமாக மனித உயிர்கள் பலியாகி வரும் இன்றைய காலகட்டத்தில் முதலுதவியாளர்களின் பணி சிறந்த உயிர்காக்கும் பணியாகக் கருதப்படுகின்றது என்றும், வீட்டுக்கொரு முதலுதவியாளரை உருவாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.

சங்கம் நடாத்திய பனம் பொருள் பயிற்சி வகுப்பில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்களை பனம் பொருள அபிவிருத்திச் சபையை சேர்ந்த உத்தியோகத்தர் திரு. சிவகணேசன் வழங்கினர்

வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு கிராம அபிவிருத்தி அதிகாரி திருமதி பொன்மணி சிவானந்தன் திரு. எம் வேதநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்கள். [இ]

## இணைக்குழு உறுப்பினர்

கொழும்புத்துறை, வியா,

கொழும்புத்துறை கிழக்கு கிளைக்குழுக்கான நிர்வாகிகள் தேர்தல் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

தலைவர்: தி கே. மார்க்கண்டு, உபதலைவர் திரு. ச. இராசையா, செயலாளர்: திரு ஆ.விஜயகுமார், பொதுச் சபைப் பிரதிநிதிகள் திரு சி மகேசன், திரு க. மார்க்கண்டு, திரு. செ. சண்முகநாதன், திரு. ஐ. பேரானந்தன். [இ]

## மக்கள் புகார்

பண்டத்தரிப்பு, வியாழன்

வறுமை நிவாரணமுத்திரைகள் தங்களுக்கு கிடைக்கவில்லை என்று கூறி பெருந்தொகையான மககள் வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு கடந்த திங்கட்கிழமையன்று சென்று உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டனர்.

இவர்களின் குறைபாட்டை அனுதாபத்துடன் செவிமடுத்த உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்களின் பிரச்னை பற்றி யாழ் மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். [இ]

## முதலுதவி படைப் பிரிவு

நயினாதீவு, வியாழன்

யாழ் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரால் நயினாதீவு இளைஞர் யுவதிகளைக் கொண்ட முதலுதவிப் படைப் பிரிவு ஒன்றைத் தாபிக்க அங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை நயினாதீவு ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலய வீதியல் அமைக்கப்பட்டிருந்த சாரணர் பாசறை மண்டபத்தில் நடைபெற்றது.

## படத்திறப்பும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், வியாழன்

பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களின் படத்திறப்பு விழாவும் குஞ்சிதபதம மலர் வெளயீட்டுவிழாவும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

விழிசிட்டி ஞான வைரவர் மன்றலில் க. சிதம்பரப்பிள்ளை தலைமையில் இடம் பெறும்இவ்விழாவில்பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி படத்தைத் திறந்து வைப்பதுடன் மலர் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார்.

அறிமுக உரையை கலாநிதி நா. சுப்பிரமணியமும் பண்டிதர் நினைவுரையைக் கவிஞர் கதிரேசர்பிள்ளையும் வாழ்க்கை வரலாற்று உரையினை க. முத்துலிங்கமும் நிகழ்த்துவார்கள்,

# உகண்டாவுக்குள் முன்னுள் துருப்பினர் ஊடுருவல்!

கம்பாலா, ஆக 21.

உகண்டாவினுள் அந் நாட்டின்முன்னுள் இரா ணுவத்தினரின் ஊடுரு வல்கள் ஆரம்பித்துள் ளன. குலா என்ற வட பிரதேச நகரமூடாகவே இந்த ஊடுருவல்கள் இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

உகண்டா ஜனுதிபதி திரு' மூஸாவாரனே இந்த ஊடுருவல் கள் பற்றிக் கருத்து வெளியிடு கையில், அரசபடைகள் இவ ற்றை வெற்றிகரமாக முறிய டித்தன என்று தெரிவித்தார்.

சூடானிலிருந்தே முன்னுள் உகண்டா இராணுவத்தினரின் ஊடுருவல்கள் இடம்பெறுவதா கவும், இவர்களில் அநேகர் முன்னுள் உகண்டா ஜனுதி பதி இடிஅமினின் விசுவாசி கள் எனவும் தெரிவிக்கப்பட் டது.

உலகச் செய்திகள்

கடந்தவாரம் முதல் இந்த ஊடுருவல் இடம்பெறுவதாகக் கூறப்பட்டது அரசபடைக ளின் எதிர்நடவடிக்கைகளின் போது 14 ஊடுருவல்காரர்கள் கொல்லப்பட்டதாகவும், இந்த நடவடிக்கையின் போது 3 உகண்டா அரசபடையினர் பலியானதாகவும் தெரிவிக்கப் பட்டது.

இதுவரை 1200 முன்னுள் துருப்பினர் ஊடுருவல்களை மேற்கொண்டிருந்தனராம்; எதிர் தாக்குதல்களையடுத்து சூடானுக்குள் பலர் திரும்பிச் சென்றுவிட்டதாகவும் தெரி விக்கப்பட்டது.

## மேத்தாவுக்கு பாரதிதாசன் விருது

சென்னை, ஆக 21

பிரபல தமிழகக் கவிஞர் மு. மேத்தாவுக்கு பாவேந் தன் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டுள்ளது.

பத்தாயிரம் ரூபா ரொக்க மும் ஒரு தங்கப்பதக்கமும் இந்த விருதில் அடங்குகின் றன

கவிஞர், மு. மேத்தா ஒரு புதுக்கவிதை எழுத்தாளரா வார் இதுதவிர கதை கவிதை கட்டுரைகள் பலவற் றை மேத்தா படைத்துள் ளார்.

## அமெரிக்காவில் தபால் ஊழியர் வெறியாட்டம்: 14 பேர் பலி

நியுயோர்க், ஆக 21.

அமெரிக்காவின் ஒக்லஹாம் நகரின் எட்மன்ட் என்ற இடத்திலுள்ள தபாலகத்தில் துப்பாக்கியாளர் ஒருவரால் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அத்துப்பாக்கி நபர் ஒரு தபால் ஊழியர்என்று தெரி விக்கப்பட்டது இவர் எட்மன்ட் என்ற அவ்விடத்தின் தபாலகத்தில் ஒருபகுதிநேர ஊழியராக கடமையாற்றி வந்தார். ஒழுங்கு நடவடிக்கை காரணமாக இவர் இடை நிறுத்திவைக்கப்பட்டிருந்தார்.

இதனுல் ஆத்திரமடைந்த இந்த தபால் ஊழியர் மூன்று தன்னியக்க கைத்துப்பாக்கிகளுடன் அத்தபால கத்தினில் பிரவேசித்து 14 பேரை சுட்டுக் கொன்ருர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றது. பொலிஸார் கொலை நபரை மடக்கிப்பிடித்துள்ளனர்.

இருவருடங்களுக்குமுன்னர் கலிபோர்னியாவில் தனி நபர் ஒருவரால் 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் இடம் பெற்ற மிகப்பெரும் தனிநபர் கொலைச் சம்பவம் இதுவெனத் தெரிவிக்கப்பட்டது.

## முதலுதவி சிகிச்சைமுகாம்

பண்டத்தரிப்பு, வியாழன்

பொன்னுலை ஸ்ரீ வரதரா ஜப் பெருமாள்ஆலய ரதோற் சவம் எதிர்வரும் 28ம் திகதி வியாழக்கிழமையன்று நடை பெறவுள்ளது

தீர்த்த உற்சவம் மறுநாள் வெள்ளிக் கிழமையன்றும் திருக்கல்யாண உற்சவம் சனிக் கிழமையன்றும் நடைபெற வுள்ளன.

இந்த உற்சவ காலங்களில் திரளும்பெரும் தொகையான பக்தர்களின் நலன் கருதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின்முதலுதவிச்சிகிச்சை முகாம் பிரிவு அத்தியட்சகர் திரு. எஸ். சிவலிங்கம் தலை மையில் ஆலய வீதியில் இயங்கிவரும் என்று படையின் வடபிரதேச ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித் தம்பி தெரிவித்தார். (க)

## நிவாரண உதவி

வல்வெட்டித்துறை, வியா

வல்வெட்டித்துறையிலும் சுற் றுப்புறப்பகுதிகளிலும் கடந்த காலங்களில் நடைபெற்ற இராணுவ கடற்படை விமா னப்படையினரின் தாக்குதல் களால் பாதிக்கப்பட்ட வித வைகளுக்கு விவசாயிகள் கமக் காரர் போன்றவர்களுக்கு நிவாரணம் வழங்குவது சம் பந்தமாக வல்வை பிரஜைகள் குழு மேற்கொண்ட முயற்சிக ளினுல் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுச் சங்கம் இத்தகை யோர்க்கு ஆடு வளர்ப்பதற்கு உதவிகள்வழங்குவதற்கு முன் வந்துள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. [வா]

## நெல்சன் மன்டெலாவுக்கு கல்கத்தா பல்கலைக்கழகம் கலாநிதி பட்ட கௌரவம்

புதுடில்லி, ஆக 21:

தென்னுபிரிக்காவில் சிறை வைக்கப்பட்டுள்ள ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்தலைவர் திரு. நெல்சன்மன்டெலாவுக்கு இந் தியாவின் கல்கத்தா பல்கலைக் கழகம் கலாநிதிப்பட்டம்வழங் கியுள்ளது.

கல்கத்தா பல்கலைக்கழகத் தின் உயர்பீடம் நேற்றுநடாத் திய ஆலோசனைக் கூட்டத்தை அடுத்தே திரு. மன்டேலாவு க்கு இலக்கியகலாநிதிப்பட்டம் வழங்குவதென தீர்மானிக்கப் பட்டது.

விரைவில் நடை பெறவிருக் கும் இப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு வைபவத்தின் போது திரு மன்டெலாசார் பில்ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் பிரதிநிதிகள் இப்பட்டத்தைப் பெற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 20 வருடங்களுக்கு கும் மேலாக சிறையிலிருக்கும் திரு மன்டெலா ஒரு சட்டத் தரணியாவார். இவர் ஒரு சிறந்த எழுத்தாளர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## இன்று அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மாவை கொல்லங் கலட்டி சடச்சபஞானவைரவர்ஆலய வருடாந்த அலங்காரஉற்சவம் இன்று ஆரம்பமாகிறது

வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மாவட்ட சார ணர் ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் யாழ் ஸ்கந்தவரோதயக் கல்லூரி யைச் சேர்ந்த சாரணர்கள் சிரமதான மூலம் ஆலயத்தை துப்பரவுசெய்தனர்.

(வா)

## தர்மகர்த்தா சபை தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

கொக்குவில் மேற்கு மஞ்ச வனப்பதி முருகப்பெருமான் ஆலய தர்மகர்த்தா சபைத் தெரிவு ஆலயத்தின் அருண கிரிநாதர் மண்டபத்தில் நடை பெற்றது

பின்வருவோர் சபை உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளனர் தலைவர்: இ பொன்னம்பலம், உபதலைவர்: க. சோமசுந்தரம், செயலா ளர்: கா.பாலசுப்பிரமணியம், உப செயலாளர் சி தரும லிங்கம், பொருளாளர்: சி. தேவசுந்தரலிங்கம்.

## யாழ்.அராலிவரை புதிய பஸ்சேவை

வேலணை, வியாழன்

தீவுப்பகுதியில் இருந்துஅரா லித்துறை முகம் ஊடாகயாழ் ப்பாணம் செல்லும் பொது மக்களின் நலனை முன்னிட்டு அராலித் துறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வடபிரா ந்திய போக்குவரத்து சபையி னர் இ. போ. ச பஸ்சேவை ஒன்றை கடந்தவாரம் முதல் நடத்திவருகின்றனர்.

மேற்படி வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் இந்த பஸ்சேவையினை நடா த்தி வருவதன் மூலம் தீவுப் பகுதியிலிருந்து பிரயாணத்தை மேற்கொண்டுவரும் பிரயா ணிகள் சிரமமின்றி தமது போக்குவரத்துக்களை நடத்தக் கூடியதாக இருக்கின்றது.

பொதுமக்களும் பல பொது நிறுவனங்களும் வடபிராந்திய இ. போ. ச அதிகாரியிடம் இச்சேவையினை நடத்தும் படி கேட்டதற்கு இணங்கவே இச் சேவை ஆரம்பிக்கப்பிட்டது.


பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க்

(இடைநிறுத்தப்பட்ட எமது டென்மார்க் பயணம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது)

கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம் (வாரத்தில் இருமுறைப் பயணம்)

லிபியா – (Labourers)
சவூதி – கிளீனேர்ஸ்
குவைத் – கிளீனேர்ஸ்
ஈராக் – ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

யூனிவேர்சல்
ஏஜென்சி
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரேலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]
(A 1044)



வண்ணை
வைத்தீஸ்வர சுவாமி கோவில்
அருள்மிகு
தையல்நாயகி அம்பாள்
'திருப்பள்ளியெழுச்சி'- நூல்

இயற்றியவர்:
புலவர் ம. பார்வதிநாதசிவம்

ஈழநாடு வெளியீடு

கிடைக்குமிடம்:
வண்ணை
வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்,
யாழ்ப்பாணம்.
(A 1138)



பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்

சவூதி – கிளீனேர்ஸ் (Labourers)
குவைத் – வீட்டுக்கு (Drivers)

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
PASSPORT BOND ஆகியனவும் தாமதமின்றி செய்து கொடுக்கப்படும்.

GROUP ATLANTIC
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவில் முன்பாக]
[A 1065]

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் ஸ்ரேசன் ரோட், காலஞ்சென்ற இராசையா இராஜேந்திரா என்பவரின் மரண சாதனமில்லாத மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

இல. தத்துவம்/283.

1. இராஜேந்திரா கைம்பெண் நாகரட்ணம், ஸ்ரேசன் ரோட், சுன்னாகம்.

மனுதார்.

எதிர்

1. இராஜேந்திரா மகள். சசிகலா.
2. இராஜேந்திரா இராஜமாணிக்க சுரேந்திரா (பராயமற்றவர்.)
3. இராஜேந்திரா இரவீந்திரா கிறிஸ் (பராயமற்றவர்.) மூவரும் ஸ்ரேசன் ரோட், சுன்னாகம்.
4. சபாபதி துரைராசா (பராயமடையாத 2-ம் 3-ம் எதிர்மனுதார்களின் சட்டப்பாதுகாவலராக நியமிக்கப்படவேண்டியவர்) தெல்லிப்பளை கிழக்கு தெல்லிப்பளை.

எதிர்மனுதார்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரண சாதனமில்லாத சொத்துக்களை நிருவகிப்பதற்காக இவ்விலக்கம் கொண்ட வழக்கு இந்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ந் திகதி இந் நீதிமன்றில் தோன்றி குறித்த பின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் ஏதுமிருப்பின் அவற்றை இம்மனறில் தெரியப்படுத்துமாறு வேண்டப்படுகின்றனர்.

1986-ம் ஆண்டு ஓகத்து மாதம் 7-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி.

வி. இராமச்சந்திர ஐயர்.
பதிவாளருக்காக

என்னால் வரையப்பட்டது.
செல்வி சு. கந்தசாமி,
மனுதாரின் சட்டத்தரணி.

(C 4051)

## 5,500 பேருக்கு நிவாரணம்

பண்டத்தரிப்பு, வியா

மாதகல் கிராம சபை அலுவலர் பிரிவில் சுமார் 5 500 பேருக்கு வறுமை நிவாரண உணவு முத்திரைகள் மாதகல் கிராமசேவை அலுவலர் திரு. எஸ், சுந்தரமூர்த்தியினால் வழங்கப்பட்டன (சு)

திரு. ஜே ஈ. செல்லத்தம்பு,
சட்டத்தரணி,
15, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மாட்டின் வீதி 15 ஏ இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சதாசிவம் சிவநாதன் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துவிடயத்தில்

மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3969

சிவநாதன் கைம்பெண் சுப்புலஷ்சுமி இல. 15 ஏ, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ஆம் ஆண்டு ஆடி மாதம் 11ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி. அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு குலசிங்கம்,
பதிவாளர்

1986ஆம் ஆண்டு வைகாசி மாதம் 26ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.


11-07-86 காரணங்காட்டுந் திகதி 5-09-86க்கு நீடிக்கப்படுகிறது.

கு குலசிங்கம்.
பதிவாளர்.

(C 4148)

## கூடைப் பந்தாட்ட சாம்பியன் கோஷ்டி

யாழ். ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் அண்மையில் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாவில், பெண்கள் பிரிவின் கூடைப்பந்தாட்டப் போட்டியில் சாம்பியன் கேடயத்தை தட்டிக்கொண்ட, யாழ். வளாகக் கோஷ்டியை, படத்தில் காணலாம்.



பெயர் விபரம்: [நிற்பவர்கள்] எஸ் உதயமலர், வி. றஜினிதேவி, எஸ். பிரேமலர், எஸ். றஜஜோதினி, கே. கீதாஞ்சலி. [இருப்பவர்கள்] ஏ ஸ்ரீ ரஞ்சினி [உப-தலைவர்], ஜே. என். பொன்னையா [பயிற்றுநர்], ஏ. தேவந்தி (காப்டன்] [வி]

## இன்றைய பலன்

மாதம்; ஆவணி
திகதி: 6 (1986-8-22)
கிழமை: வெள்ளி
திதி; திருதியை
மு இ வரை
நக்ஷத்திரம்: பூரட்டாதி காலை 8-28ன் மேல் உத்தரட்டாதி

மேடம்: தொழில் துறையிலும் உற்சாகம் பிறக்கும். ஆதரவு கொடுப்பதற்கு அன்பர்கள் முன்வருவார்கள். வெளியிடத் தொடர்பும் மகிழ்ச்சியைத்தரும்.

இடபம்: நண்பர்களும்காலை வாரிவிடக்கூடும் மனப்போராட்டத்திற்குமிடமுண்டு எதையும் பொறுமையுடன் செயலாற்றவும்

மிதுனம்: அன்னையின் ஆசியும் மகிழ்ச்சியைத் தரலாம். பூமிப்பிணக்கும் தீரலாம். விவசாயிகளுக்கு நன்னாள்.

கடகம்: புத்திர பெருமையுண்டு. புண்ணிய விருப்புமுண்டு. கடமையும் விதக்கும் கண்ணியமும் பிறக்கும். சுப தினம்.

சிங்கம்: ஆயுத பீடைக்குமிடமுண்டு. போக்கு வரத்து விடயத்திலும் கவனம் வேண்டும், எதிரிகளும் எக்காளமிடுவர், அமைதிநன்று.

கன்னி: களஸ்திர வழிச் சுகமுமுண்டு. தொழில் புரியுமிடத்திலும் ஒத்துழைப்புக்கிட்டும் பிறபொருள் வரவிற்கும் இடமுண்டு.

துலாம்: நம்பிக்கை மோசடி நடக்கும். அவசரப் போக்கு ஆபத்தைத் தேடித்தரலாம். குடும்பத்திலும் பிளவுகள் தோன்றக்கூடும்.

விருச்சிகம்: புரட்சிகரமான நிலையைவிரும்புவீர்கள். இதயத்திலும் இன்பம் பொங்குப்பித வழியாலும் நன்மைக்கிடமுண்டு.

தனுசு: இதமான வாழ்வு இன்சொல் இவற்றுடன் பெரியோர் ஆசியுமுண்டு வாகன நலமுண்டு. வரவிலும்திருப்தியுண்டு.


மகரம்: இலட்சியப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். பொருள் மெத்தவும் சேரும் தொழில் முன்னேற்றமுண்டு நன்னாள்.

கும்பம்: குமுறும் நெஞ்சத்துடன் நாளைக்கடத்துவீர்கள் அரசபயத்திற்குமிடமுண்டு அபாய காரியங்களில் பங்குபற்றுவதில் நிதானம்அவசியம்

மீனம்: குடும்பப் பிரிவுகள் தோன்றலாம் சிலருக்கு மனவிரக்திக்குமிடமேற்படலாம் எவ்விடயத்தையும் நன்கு ஆலோசித்தபின்பே செயலாற்றவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



செசிலியா ஆசீர்வாதம்

இறைவன் படைப்பு: 2±-07-1914

இறைவன் அழைப்பு: 23-08-1985

அன்பின் இறைவா! எங்களிடமிருந்து உம்முடன் அழைத்துக் கொண்ட உமது அடியாள் செசிலியா ஆசீர்வாதம் மீது உமது அன்பையும் இரக்கத்தையும் பொழிந்து உமது நித்திய பேரின்ப வீட்டில் உம் முகதரிசனை கண்டு இன்புற்றிருக்கச் செய்தருளுமாறு தாழ்மையுடன வேண்டுகின்றோம்.

அவவின் ஆன்மசாந்திக்காகச் சுண்டிக்குளி புனித யுவானிபார் ஆலயத்தில் நாளை [23-8-86] காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில், அன்பர்களையும் சமுகமளித்து, அவவுக்காக உருக்கமாக மன்றாடிக் கொள்ளுமாறு பணிவாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அன்புடன் நினைவுகூரும்:
கணவன், புத்திரர் புத்திரிகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

14/2 கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

C 4165

## லொறியில் கொள்ளை

வவனியா, வியா.

கொழும்பிலிருந்து வவனியாவிற்கு கடந்த திங்கட்கிழமை பொருட்களை ஏற்றி வந்த லொறியொன்று வானமொன்றில்வந்த இனந்தெரியாதவர்களால் இடை மறிக்கப்பட்டு சுமார் ஐயயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது.

இந்த லொறியின் சாரதியும் நடத்துநரும் கத்தியால் குத்தப்பட்டுத் தாக்கப்பட்டதுடன் இவர்களிடமிருந்து 1 500 ரூபா ரொக்கப்பணமும் மணிக்கூடுகளும், அடையாள அட்டையும் இவர்களால் கொள்ளையடிக்கப்பட்டன.

(ஓ)

## வீடுகளில் திருட்டு

காரைநகர், வியாழன்

காரைநகர் கிழக்கு கடற்படைமுகாமுக்கு அண்மையில் மக்கள் வெளியேறிய வீடுகளில் களவாடியவர்களை இளைஞர்கள் தேடிப் பிடித்து வருகின்றனர்.

கடற்படை முகாமுக்கு சமீபத்திலுள்ள மடத்துவளவு, தோப்புக்காடு கிராமத்து மக்கள் பயம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறினர். அவர்களது வீட்டிலுள்ள பொருட்கள் கடந்த பல மாதங்களாகக் களவாடப்பட்டு வந்துள்ளதை அறிந்து வீட்டுக்காரர்கள் இளைஞர்களுக்கு முறைப்பாடு செய்ததாகவும் இதனை அடுத்து இளைஞர்கள் பொருட்களை திருடியவர்கள் என சந்தேகிக்கப்படும் நால்வரை விசாரணை செய்த பின்னர் விடுவித்துள்ளனரென்றும் தெரியவருகிறது. [இ]

## இன்று சாம்பியன் மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 42-வது ஆண்டு விழாவை முன்னிட்டு 7-பேர் கொண்ட '12 ஓவர்' மென்பந்துக் கிரிக்கெட் போட்டியின் இறுதி சாம்பியன் மோதல் இன்று நடைபெறுகின்றது.

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் இவ் சாம்பியன் மோதலில் ஈச்சமோட்டை சனசமூக நிலையக் கோஷ்டியும் வளர்மதிக் கோஷ்டியும் மோதிக்கொள்கின்றன.

இப்போட்டிக்கு, பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். [வி]

## அச்சம் தேவையில்லை

கொழும்பு, வியாழன்

''வடமாகாணத்துக்கு வழங்கப்படும் அதே அதிகாரங்கள் தான் இலங்கையின் ஏனைய மாகாணங்களுக்கும் வழங்கப்படும். இதனையிட்டு எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை ''

இவ்வாறு கொழும்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவர் திரு அல்மன் பீரிஸ் கொட்டாவையில் நடைபெற்ற விழா ஒன்றில் தெரிவித்தார். (சி)

வெளிநாட்டு
பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒருமாதத்துக்குள் பயணம் செய்யலாம்.)
★ லிபியா: (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
✶ சவூதி அரேபியா: (ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
✶ லெபனான்: (லேபறேஸ்)
✶ குவைத்: (கிளீனேஸ்)
✶ குவைத்: (வீட்டுப் பணிப் பெண்கள்)
✶ சிங்கப்பூர்: (வீட்டுப் பணிப்பெண்கள்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச்செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் கே. எஸ். பரம் சோதிநாதர்
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால் வரவும்.
C 4183

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வெள்ளிக்கிழமை 22-8-86

# கோட்டையிலிருந்து அதிகாலை வரை 'ஷெல்' தாக்குதல்

# பதற்றத்தால் மக்கள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து யாழ். நகர எல்லைப்பகுதி வரை 'ஷெல்' தாக்குதல்கள் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப் பட்டன.

இத்தாக்குதல்களால் மக்கள் தங்கள் உயிருக்கும் உடலுக்கு ஆபத்து ஏற்படலாமென அஞ்சி வீடுகளை விட்டு வெளியேறி வேறிடங்களில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

யாழ். நகரின் பல்வேறு பகுதிகளையும் நோக்கி 'ஷெல்'கள் ஏவிவிடப்பட்டன.

மக்கள் விடியும் வரை விழித்திருந்தனர்.

நேற்று நள்ளிரவு யாழ். வண்ணை ஐயனார் கோவிலடியிலும், நாசசிமாா கோவிலுக் கண்மையிலும் அடுத்தடுத்து மூன்று ஷெல்கள் விழுந்து வெடித்தன இதனால் ஒரு வீடும், மற்றொரு வீட்டின் மதிற்சுவரும் பலத்த சேதமடைந்தன. இச்சம்பவம் இடம்பெற்றநேரம் வீட்டிலுள்ளவர்கள் வேறிடத்தில் பாதுகாப்பாக இருந்தமையால் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

கோட்டையிலிருந்து ஏவிவிடப்பட்டு வெடித்த ஷெல்கள் மிகவும் சக்திவாய்ந்தவை எனத்தெரிவிக்கப்படுகிறது. [மா]

## விபத்தில் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி. யாழ் ஆஸ்பத்திரி சிற்றூழியரான சீவரத்தினம்(35வயது) என்பவர் நேற்று விபத்தில் சிக்கி பலியானுர்.

இவர்தமது கடமை முடிந்து நாவற்குழியிலுள்ள வீட்டுக்கு சைககிளில் செல்லும் பொழுது லொறி விபத்தில் சிக்கிப் பலியானுர். [மா]

## ஷெல்தாக்கிய குழந்தையும் மரணம்


யாழ்ப்பாணம், வெள்ளி. யாழ். நகரில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஷெல் தாக்குதலில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்தவர்களில் 2 வயதுக்குழந்தையான பா. விதுனன் நேற்றுக் காலை மரணமானுர். [மா]

## முஸ்லிம்களுக்கு தனி மாகாணம்

கொழும்பு வியாழன "கிழக்கில் முஸ்லிம் மக்கள் தனிமாகாணமொன்றைக்கோரினுல் நாம் அதனை எதிர்க்க மாட்டோம் ஆனுல் உருவாகும் முஸ்லிம் மாகாணம் மொழி வாரி பிரச்னை காணி குடியேற்றம் தொடர்பாக எம்முடன் ஒத்துழைக்கக் கூடியதாய் அமைய வேண்டும் என்பதே எமது விருப்பம்."

இவ்வாறு கூட்டணைச் செயலாளர்நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் தம்மை நேற்று முன் தினம் சந்தித்த அகில உலக முஸ்லிம் இளைஞர் சம்மேளனத் தலைவர் ஹஜியார் அஸ்ரப் குசைனிடம் தெரிவித்தார்,

மேலும் நாம் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இல்லாத காலததில் அம்பாறை மாவட்டத்தில் சுமார் 44000 சிங்களவர் குடியேற்றப்பட்டுள்ளனர். எனவே உருவாகும் முஸ்லிம் மாகாணம் தொடர்ந்தும் இருக்குமென நிச்சயம் சொல்லமுடியாது. என்று திரு. அமிர்தலிங்கம் கூறினுர். [ஊ]



நேற்றுமுன்தினம், யாழ். நகரில் நடந்த ஷெல்' தாக்குதலில் பலியான யாழ் மத்தியகல்லூரி மாணவன் கந்தசாமி சாந்திக்குமார். படம் 'தேவா'

## தீங்கு விளைவிக்கும் உணவுகள்

கொழும்புத்துறை. வியாழன் உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் உணவுப்பொருட்களை மக்கள் வாங்கி உண்ணக் கூடாது இத்தகைய உணவுகளைத் தடைசெய்யவேண்டும் என்று காங்கேசன்துறை சுகாதார வட்டாரக்குழுக்கூட்டத்தில் கோரப்பட்டுள்ளது.

## "பேச்சுக்கள் தோற்ருல் ராணுவ ஆட்சியை தவிர்க்கமுடியாது'

கொழும்பு, வியாழன் "வடக்கில் ஆரம்பித்த ஆயுதப் போராட்டம் இன்று கொழும்பிற்கும் வந்து யாலவன விலங்கு சரணலயம் வரை பரந்து விட்டது நாளை தமக்கு என்ன நிகழுமோ என்று மக்கள் அச்சத்துடன் இன்று வாழ்கின்ருர்கள்."

இவ்வாறு கலவான எம். பி திரு. டி. யூ. குணசேகரா எட்டியாந் தோட்டையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் வன்முறை சம்பவங்களால் இறநதவர்களில் பெருமளவினர் அப்பாவிப் பொது மக்களே என்ருர்.

தறபோது நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்ருல் நாட்டில் ராணுவ ஆட்சி நிலவப் போவதை தவிர்க்க முடியாது என்று கூறிய அவர் அத்தகைய ஆட்சியில் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவிப் பொது மக்களே" மேலும் இவ்வாருன நிலைக்கு அரசு வருமாஞல் இப் பிராந்தியத்தில் பெரும் யுத்தமொன்று உருவாகி எமது நாடே அழியும் நிலையை தவிர்க்க முடியாது போகும் என்ருர்' (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட். ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126

## மரண அறிவித்தல்

### பாலசுப்பிரமணியம் விதுனன்

யாழ்ப்பாணம் கொட்டடி பாலசுப்பிரமணியம் விதுனன் அகால மரணமானுர். இவர் பாலசுப்பிரமணியம்(A G A Office, செங்கலடி) உருத்திராம்பாள் தம்பதிகளின் ஏக புத்திரனும், ஆ.சி நடராசா தம்பதிகளினதும் [நியூஸ் ஏஜென்ட்- யாழ்], கோபால பிள்ளை- பாக்கியலட்சுமி தம்பதிகளின் பேரனுமாவார் அன்னரின் இறுதிச் சடங்கு இன்று வெள்ளிக்கிழமை [22-8-86]பி ப 1மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் சகலருக்கும் அறியத் தருகிறேம்.

குறிப்பு: 22-8-86 இக் குடும்பத்தில் நடைபெற இருந்த திருமண வைபவம் ஒத்தி வைக்கப்பட்டுளளது என்பதையும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிருேம்.

தகவல்: ஆ.சி. நடராசா[நியூஸ்ஏஜென்ட் யாழ்.
(C 1168)

### திருமதி கனகம்மா சுப்பிரமணியம்

காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற சின்னையா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற இராசம்மா அழகரத்தினம், சோமசுந்தரம், தில்லைமுத்து, சண்முகம் செல்லம்மா ஆகியோரின் அன்புமைத்துனியும், மல்லாகம் பத்மகாந்தன், மனேகாந்தன் [கற்பகப்பிள்ளையார் ரவல்ஸ்) ஆகியோரின் பேத்தியும், மல்லாகம் காலஞ்சென்ற இராசையா (இரத்தினசிங்கம் கார்வர்த்தகர்) மாமியாரும், காலஞ்சென்ற தவமணியின் பெரியதாயாரும், பாலாம்பிகை, ஸ்ரீதரன் இராசேஸ்வரி, சர்வேஸ்வரன், செல்வி கமலேஸ்வரி, மகேஸ்வரி, ரவிச்சந்திரன் ஆகியோரின் மாமியாரும், தயாநிதி, நளாயினி றஜினி, நிலோஜினி, விஞேத்சங்கர் ஆகியோரின் பாட்டியும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று 22-8-86 காலை 10 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- இ. மனேகாந்தன்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, சுன்னுகம். [C-4194]

### திருமதி சரஸ்வதி தாமோதரம்பிள்ளை

காலஞ்சென்ற மல்லாகம் ஓய்வுபெற்ற கிராம அதிகாரி திரு. அ. சி. தாமோதரம்பிள்ளை J. P. அவர்களின் மனைவியும், திரு. சிவசம்பு (அதிபர், மு/ ஒட்டுசுட்டான் ம வி.) திரு அகிலேஸ்வரன் (யா / ஸ்கந்தவரோதயாக்கல்லூரி), அகிலேஸ்வரி, கமலாதேவி, விமலாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு S. அரசரத்தினம் (பென்சனர்), திரு. S. சதானந்தன் (நிலஅளவையாளர்), திருமதி S. சிவசம்பு (திட்டஅமுலாக்கல் உத்தியோகத்தர் கச்சேரி, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புமாமியாரும், வாசுதேவன் (பிரான்ஸ்), முரளிதரன், மீனலோஜனி, யசோதா, கீதாஞ்சலி, ஹார்சினி, சுபகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாகிய திருமதி சரஸ்வதி தாமோதரம்பிள்ளை 21-8-86 காலமானுர். ஈமக்கிரியைகள் அன்றே முடிவடைந்தன. நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்: திரு. தா. சிவசம்பு:
விதானையார் ஒழுங்கை,
மல்லாகம். (C 4191)

## மரண அறிவித்தல்

### திருமதி சோபனம் யோகராசா

உடுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரபல சமூக சேவையாளர் காலஞ்சென்றயேக்கப் காந்தி J.P, திருமதி கிறேஸ் காந்தி அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற ஜேம்ஸ் தம்பிப்பிள்ளை திருமதி கெலன் ஆகியோரின் பெருமகளும், திரு. M.W. செல்வத்துரை திருமதி மேரிஸ்பெலா தம்பதிகளின் அன்பு மருமகளும், திருமதி லிசி ஞானப்பிரகாசம் அவர்களின் பெருமகளும் ஆகிய திருமதி சோபனம் யோகராசா 19-08-86 செவ்வாய் அன்று இரவு கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் நவாலி சென்பீற்றேஸ் றே. க. த. பாடசாலை அதிபர் திரு. நா. யோகராசா J. P. அவர்களின் அன்பு மனைவியும், ரேணுகா, அனுஷியா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற J. றிச்சாட் (சுகாதாரப்பரிசோதகர்), திருவாளர்கள் றெபேட் அரியரத்தினம் புகையிரதப்பகுதி , J. ஆசீர்வாதம், J. எட்வேட், S அருளானந்தம் (அன்றீஸ்), K. சாந்திரன் (பாறெயின்). திருமதி வசந்தா பாலசிங்கம் (ஆசிரியை), திருமதி விமலாதுரையையா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. A. A, பாலசிங்கம் (அதிபர்), திரு. அல்பிரட் துரையையா (அமெரிக்கா), திரு. S. தேவதயாளன் (கனடா), திரு. நா தேவநேசன், திரு. தேவதஞ்சன், திருமதி ஆ கமலா, செல்வி. நா. புஷ்பராணி திருமதி போ. ஜெயமலர், திருமதி டா. தேவமலர், திருமதி ம. கிருபைமலர், செல்விகள் நா. அரியமலர், நா. ஞானமலர், திருமதிகள் A. செல்வானந்ததேவி, அ. ஜெயானந்கதேவி, ச. ராகினிதேவி ஆகியோரின் மைத்துனியும், செல்விகள் பிரேமிலா, சர்மிலா, தர்மிலா, சிரோமி (அமெரிக்கா), அஜந்தன் (அமெரிக்கா) ஆகியோரின் பெரிய தாயாரும், திரு. தேவராசா [குவைத்], கிறிஸ்ரி, ஜீவா, பிராங்ளின் குயின்ரன் பிறெடி, ஜேன் கிறிஸ்ரீன், அனிற்ரு, பிறெசிலா, தக்சிலா, டயானு ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னரின் பூதவுடல் காந்தி ஆச்சிரமத்திலிருந்து இன்று [22-08-86) வெள்ளிக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு இரங்கற் பலிக்காக உடுவில் செபமாலை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்குக் கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
C 4195